**மாவட்ட அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

முன்னிலை: திருமதி. ஜி.எம். வசந்தி, எம்.எல்.,

முழுக் கூடுதல் பொறுப்பு மாவட்ட அமர்வு நீதிபதி, நாகப்பட்டினம்

(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 09ம் நாள் - செவ்வாய்கிழமை

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் வைகாசி 26-ம் நாள்

**கு.ப.ம.எண். 296/2026**

முருகானந்தம், த/பெ கோவிந்தசாமி ..... மனுதாரர்/ 1வது எதிரி/ கார் உரிமையாளர்

-எதிர்-

காவல் ஆய்வாளர், வேதாரண்யம் காவல்நிலையம்,
குற்ற எண் 40/2024 ......எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இன்று (09.06.2026) விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் திரு. என். சுவாமிநாதன் மற்றும் எதிர்மனுதாரர்தரப்பு அரசு வழக்குரைஞர் திரு. ஆர்.செல்வராஜ் ஆகியோர் ஆஜராகி எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.....

**// உத்தரவு//**

இம்மனு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண். 40/2024-ல் சட்டப்பிரிவுகள் 147, 148, 341, 120(பி), 302 உ/இ 34, 115 இ.த.ச.வின் கீழான குற்றங்களில் ஈடுபடுத்தியதாக மனுதாரருக்கு சொந்தமான TN03 S 6592 என்ற பதிவெண் கொண்ட மாருதி சுசுகி வாகனத்தை திரும்ப பெற கோரி பிரிவு 497 BNSS ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் இவ்வழக்கின் 1வது எதிரி என்றும், மனுதாரருக்கு சொந்தமான ரூ.80,000/- மதிப்புள்ள TN03 S 6592 என்ற பதிவெண் கொண்ட மாருதி சுசுகி எல்எம்வி கார் எதிர்மனுதாரரால் கைப்பற்றப்பட்டு சி.பி.எண்.55/2026 ஆக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு காவல்நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி கார் தற்போது காவல்நிலையத்தில் பாதுகாப்பின்றி வெளியில் நிறுத்தப்பட்டும், அதன் பாகங்கள் துருப்பிடித்து பழுதாகியும், டயர் மக்கியும் போய் மனுதாரருக்கு பெருத்த கஷ்டம் ஏற்படக்கூடிய நிலையுள்ளது என்றும், மேற்படி வாகனத்தை இந்நீதிமன்றத்தின் அமர்வு வழக்கு எண்.109/2024 முடியும்வரை மனுதாரர் பொறுப்பில் தற்காலிகமாக ஒப்படைக்க உத்தரவிடக்கோரியுள்ளார்.

3. கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் இந்நீதிமன்றத்தின் அமர்வு வழக்கு எண்.109/2024ல் 1வது எதிரியான மனுதாரர் சிவராஜா என்பவரை கொலை செய்து திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் சரணடைந்த பிறகு அவரை போலீஸ் காவலில் எடுத்து விசாரித்தபோது மனுதாரரின் வீட்டில் இருந்த TN03 S 6592 என்ற பதிவெண் கொண்ட மாருதி சுசுகி எல்எம்வி கார் கைப்பற்றப்பட்டு எதிர்மனுதாரரால் கைப்பற்றப்பட்டு சி.பி.எண்.55/2026 ஆக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு காவல்நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி காரை மனுதாரர் வசம் ஒப்படைத்தால், வாகனத்தை விற்றுவிடுவார் என்றும், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தமாட்டார் என்றும், மீண்டும் வேறு

குற்றச்செயலில் ஈடுபடுவார் என்றும், வாதிட்டு, மேற்படி காரை மனுதாரரிடம் வழங்க கடும் ஆட்சேபனை தெரிவித்தார்.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் மீது குற்ற எண். 40/2024-ல் சட்டப்பிரிவுகள் 147, 148, 341, 120(பி), 302 உ/இ 34, 115 இ.த.ச.வின் கீழான குற்றங்களில் மனுதாரருக்கு சொந்தமான TN03 S 6592 என்ற பதிவெண் கொண்ட மாருதி சுசுகி வாகனத்தை ஈடுபடுத்தியதாக கூறி எதிர்மனுதாரரால் கைப்பற்றப்பட்டு சி.பி.எண்.55/2026 ஆக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு காவல்நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது, மேற்படி கார் தற்போது காவல்நிலையத்தில் பாதுகாப்பின்றி வெளியில் நிறுத்தப்பட்டும், அதன் பாகங்கள் துருப்பிடித்து பழுதாகியும், டயர் மக்கியும் போய் மனுதாரருக்கு பெருத்த கஷ்டம் ஏற்படக்கூடிய நிலையுள்ளது, மேற்படி வாகனத்தை இந்நீதிமன்றத்தின் அமர்வு வழக்கு எண்.109/2024 முடியும்வரை மனுதாரர் பொறுப்பில் தற்காலிகமாக ஒப்படைக்க கோரினார்.

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் இந்நீதிமன்றத்தின் அமர்வு வழக்கு எண்.109/2024ல் 1வது எதிரியான மனுதாரர் சிவராஜா என்பவரை கொலை செய்து திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் சரணடைந்த பிறகு அவரை போலீஸ் காவலில் எடுத்து விசாரித்தபோது மனுதாரரின் வீட்டில் இருந்த TN03 S 6592 என்ற பதிவெண் கொண்ட மாருதி சுசுகி எல்எம்வி கார் எதிர்மனுதாரரால் கைப்பற்றப்பட்டு சி.பி.எண்.55/2026 ஆக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு காவல்நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் விசாரணை நடைபெற்று வருகிறது. மனுதாரரின் காரை அரசுத்தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய வேண்டும். இந்நிலையில் மேற்படி காரை மனுதாரர் வசம் ஒப்படைத்தால், வாகனத்தை விற்றுவிடவும், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தமால் இருந்துவிடவும், மீண்டும் வேறு குற்றச்செயலில் ஈடுபடவும் வாய்ப்புள்ளது.

ஆகவே, மேற்படி மனுதாரரின் காரை அரசுத்தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய வேண்டுமென்பதாலும், வழக்கின் சூழ்நிலையை கவனத்தில் எடுத்துக்கொண்டும், மனுதாரருக்கு காரை திரும்ப வழங்க அரசுத்தரப்பில் கடும் ஆட்சேபனை தெரிவித்திருப்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்யலாம் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

முடிவில், இம்மனு **தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இன்று (09.06.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

09/06/2026

மாவட்ட அமர்வு நீதிபதி (முகூபொ)
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)
நாகப்பட்டினம்.

நகல்
1. காவல் ஆய்வாளர், வேதாரண்யம் காவல்நிலையம்
2. திரு. என். சுவாமிநாதன், வழக்கறிஞர், நாகப்பட்டினம்.

D.No. 3111, 3112
09-06-2026